நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
**NSW Federation of Tamil Schools Inc.**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

## தரம் : இடைநிலை – மேற்பிரிவு

## Level : Intermediate - Upper

***December 2011***

வினாக்கள் : 55

வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள்

(வாசிப்பதற்கான நேரம் : 10 நிமிடங்கள் உட்பட)

உங்கள் பதில்களைத் தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மிகச்சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## அவுஸ்திரேலியாவில் தமிழர்

அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர் தொடர்பான புள்ளிவிபரங்களை அரச திணைக்களம் ஒன்று வெளியிட்டுள்ளது. Australian Bureau of Statistics (ABS) எனப்படும் அவுஸ்திரேலிய புள்ளிவிபரவியல் துறை ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை குடிசனக்கணக்கெடுப்பு ஒன்றை நடாத்துகிறது. அவுஸ்திரேலியாவில் வாழும் மொத்த மக்கள் தொகையைக் கணக்கிடுவதற்கு இது உதவுகிறது. இக்கணக்கெடுப்பில் இங்கு வாழும் தமிழர் தொகையையும் அறிய முடிகிறது.

நீங்கள் வீட்டில் பேசும் மொழி என்ன? என்ற வினாவிற்கு தமிழ் என விடையளித்தவர்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்கள் என வகுக்கப்பட்டுள்ளனர். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற குடிசன மதிப்பீடுகளின் படி சுமார் இருபத்தினாலாயிரம் பேர் தமிழர்கள் என தெரியவருகிறது. அந்த மதிப்பீட்டின் படி நியூசவுத்வேல்ஸ் மாநிலத்திலேயே அதிக தமிழர்கள் இருந்தார்கள். அதற்கு அடுத்த இடத்தில் விக்ரோறியா மாநிலம் இருந்தது. மிகக்குறைந்த தமிழர்கள் வாழ்ந்த மாநிலமாக தஸ்மானியா விளங்கியது. அடுத்த குடிசன மதிப்பீட்டின் போது தமிழர் தொகை முப்பத்தாறாயிரத்தை எட்டியிருந்தது. இந்த ஆண்டு மத்தியில் நடந்த குடிசன மதிப்பீடுகளின் முடிவுகள் அடுத்த ஆண்டில் தான் தெரியவரும். எனினும் தமிழர் தொகையில் கணிசமான அதிகரிப்பு காணப்படும் என தமிழ்ச் சமூக ஆர்வலர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

முந்தைய ஆண்டைப் போலவே இம்முறையும் தமிழ்ப் பாடசாலைகள் மூலமாகவும், சமூக வானொலிகள் மூலமாகவும் தமிழ் மக்களிடம் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் மேலதிகமாக குடிசன மதிப்பீடு தொடர்பில் தனியான நடவடிக்கைக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. துண்டுப் பிரசுரங்கள், சஞ்சிகை மற்றும் வானொலி விளம்பரங்கள், வானொலிகளில் சந்திப்புகள், கலந்துரையாடல்கள் என முன்னை விட அதிகளவில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்க் குடும்பங்கள் தமது விபரங்களைப் பதியும் போது ஆங்கிலம் தவிர்ந்து வீட்டில் பேசும் மொழி என்ன என்ற கேள்விக்கும், பூர்வீகம் என்ன என்ற கேள்விக்கும் தமிழ் என்றே பதிலளிக்க வேண்டும் என இந்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்களில் வலியுறுத்தப்பட்டது. தமிழ்ச் சமூக ஆர்வலர்கள் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களின் உண்மையான தொகையைக் கண்டறிவதற்கு தாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மிகுந்த பலன் அளிக்கும் என நம்பிக்கை கொண்டுள்ளனர்.

தமிழர்களின் உண்மையான பலம் என்ன என அறிந்தால் மட்டுமே எமக்குரிய நிதிப்பங்கீடுகளையும், சலுகைகளையும் அரசிடம் எடுத்துச் சொல்லி எமது சமூக மேம்பாட்டிற்கு உழைக்க முடியும் எனக்கூறும் சமூக ஆர்வலர்கள் குடிசன மதிப்பீட்டு முடிவுகளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

1. அவுஸ்திரேலியாவில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை குடிசன மதிப்பீடு நடைபெறுகிறது.?
   a) 3
   b) 5
   c) 7
   d) 9

2. கடைசியாக எந்த ஆண்டு அவுஸ்திரேலியாவில் குடிசன மதிப்பீடு நடைபெற்றது?
   a) 2001
   b) 2006
   c) 2010
   d) 2011

3. 2001 குடிசன மதிப்பீடுகளின் அடிப்படையில் பின்வரும் கூற்றுகளுள் மிகச்சரியானது எது?
   a) நி.ச.வே மாநிலத்தில் தமிழர்கள் தொகை இப்போது அதிகமாக இருக்கிறது.
   b) மேற்கு அவுஸ்திரேலியாவும், குயீன்ஸ்லாந்தும் தமிழர்கள் மிகக்குறைந்த அளவில் வாழும் மாநிலங்களாகும்.
   c) பத்து ஆண்டுகளுக்கு முன் நி.ச.வே மற்றும் விக்ரோறிய மாநிலங்களில் தமிழர்களில் பெரும்பாலானோர் வாழ்ந்தார்கள்.
   d) இவை எல்லாம் சரி.

4. 2006 குடிசன மதிப்பீடுகளின் படி அவுஸ்திரேலியாவில் தமிழர் தொகை:
   a) 24000
   b) 36000
   c) 46000
   d) 66000

5. அடுத்த ஆண்டு வெளிவர இருக்கும் குடிசன மதிப்பீடுகளில் தமிழர் தொகை மிக அதிகமாக காணப்படும் என தமிழ்ச் சமூக ஆர்வலர்கள் நம்புவதற்குக் காரணம்:
   a) இயற்கை அதிகரிப்பினால் தமிழர் தொகை அதிகரித்து வந்திருக்கிறது.
   b) விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
   c) தமிழ்ப் பாடசாலைகள் மூலமாகவும், வானொலி உரையாடல்கள் மூலமாகவும் போதுமான தகவல்கள் தமிழ்க் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.
   d) இவை எல்லாம் சரியானவை.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

6. ஒருவரைத் தமிழர் என்று அடையாளம் காண்பதற்கு உதவும் வினா:
   a) உங்களுக்கு ஆங்கிலம் பேசத் தெரியுமா?
   b) உங்களுக்குத் தமிழ் பேசத் தெரியுமா?
   c) உங்களுக்கு என்ன மொழி பேசத் தெரியும்?
   d) ஆங்கிலம் தவிர வேறு என்ன மொழியை நீங்கள் வீட்டில் பேசுகிறீர்கள்?

7. பின்வருவனவற்றுள் தவறான கூற்று.
   a) குடிசன மதிப்பீடுகளின் முடிவுகளை சமூக ஆர்வலர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்ப்பதற்குக் காரணம் தமிழர்களின் உண்மையான தொகையைக் கண்டறிவதற்கு.
   b) தமிழர்களின் உண்மையான தொகையைக் கண்டறிந்தால் தமிழர்களின் பலம் என்ன என்பது தெரியவரும்.
   c) இவை இரண்டும் சரியானவை
   d) இவை இரண்டும் பிழையானவை.

8. உரைப்பகுதியின் படி, தமிழர்களின் உண்மையான தொகையை அரசுக்குத் தெரிவிப்பதனால் கிடைக்கக்கூடிய நன்மைகள்:
   a) எமக்குரிய நிதிப்பங்கீடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
   b) அதிகம் பேர் இங்கு வருவதற்கு உதவியாக இருக்கும்.
   c) எல்லாம் ஒரே மாதிரியாகவே இருக்கும்.
   d) இவை எதுவும் சரியல்ல.

9. அவுஸ்திரேலிய அரசுக்காக குடிசன மதிப்பீட்டை நடாத்துவது:
   a) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்.
   b) வருமான வரித்துறை.
   c) சென்றலிங்க்
   d) புள்ளிவிபரவியல் துறை.

10. உரைப்பகுதியில் விழிப்புணர்வு என்பதை விளக்கும் மிகப்பொருத்தமான கூற்று.
   a) குடிசன மதிப்பீட்டுத் தினத்தில் விழித்திருத்தல்.
   b) குடிசன மதிப்பீட்டை உணர்ந்திருத்தல்.
   c) குடிசன மதிப்பீடு செய்வோரைத் தெரிந்திருத்தல்.
   d) குடிசன மதிப்பீடு தொடர்பாக எவ்வெவ்வினாக்கள் எமக்கு முக்கியமானவை என்பதை அறிந்து தெளிந்து கொள்ளல்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினா: 11 - 15**

**பின்வரும் கவிதையை வாசித்து அதன் கீழ் காணப்படும் வினாக்களுக்கு மிகச்சரியான விடையைத் தெரிவு செய்க.**

அடக்கி வைத்த உணர்ச்சிகள் எல்லாம்
உன்னைப் புதைக்கும் புதை குழிகள்.
கோபம் என்பதும் உணர்ச்சியன்றி
குற்றமல்ல! என சினங்கொள்.

சொன்னால் போதும், அழுதால் போதும்
கோபம் குறையும் என்பதுவும்
மூடப்பழக்கம் தானே! அன்றி
முடிவல்ல என சினங்கொள்!

கையில் கிடைத்த பொருளை எல்லாம்
உடைக்கத் தோன்றும் வேளையிலே
கையில் கிடைக்கும் பொருளை எல்லாம்
துடைத்து வைத்துச் சினங்கொள்.

தலைக்குக் குருதி ஏறிச் சென்று
கண்கள் சிவக்கும் நாழிகையில்
முடிக்க முடியா வேலை ஒன்றை
முடித்துக் காட்டிச் சினங்கொள்.

உலகம் வெறுத்து உயிர்கள் வெறுத்து
சாகத் தோன்றும் நேரத்தில்
மனமே மனமே மனமே மனமே
கவிதை எழுதிச் சினங்கொள்.

*மதன் கார்க்கி நன்றி: குமுதம்.*

11. கவிஞர் இக்கவிதையில் சொல்ல வரும் செய்தி.
    a) கோபம் வரும்போது வெளிக்காட்டக் கூடாது.
    b) கோபம் வரும்போது கையில் கிடைப்பதை உடைக்கவேண்டும்.
    c) கோபம் என்ற உணர்ச்சி குற்றம் அல்ல.
    d) இவை எல்லாம் சரி.

12. அடக்கி வைத்த உணர்ச்சிகள் எல்லாம்
    உன்னைப் புதைக்கும் புதை குழிகள் என்பதன் பொருள்
    a) கோபத்தை அடக்கினால் உன்னை அழித்துவிடும்.
    b) கோபத்தை குழியுள் போட்டு புதைக்க வேண்டும்.
    c) இவை இரண்டும் சரியானவை.
    d) இவை எதுவும் சரியல்ல.

13. பின்வரும் கூற்றுக்களுள் மிகப்பொருத்தமானது.
    a) கோபம் வந்தால் அழுகை வராது
    b) கோபம் வரும்போது சொல்லக்கூடாது.
    c) அழுவதாலோ, சொல்வதாலோ கோபம் குறையாது.
    d) யாருக்கும் கோபம் வரக்கூடாது.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

14. கோபம் வரும்போது என்ன செய்ய வேண்டும் என்கிறார் கவிஞர்?
   a) செய்யமுடியாதிருந்த வேலையைச் செய்து காட்டவேண்டும்.
   b) கையில் கிடைக்கும் பொருளை நன்கு துடைத்து வைக்கவேண்டும்.
   c) கவிதை எழுதி உணர்ச்சியை வெளிக்காட்டவேண்டும்.
   d) இவை எல்லாமே சரியானவை.

15. இக்கவிதைக்கு பொருத்தமான தலைப்பு:
   a) அடக்கி வைத்த உணர்ச்சிகள்
   b) சினங்கொள் மனமே
   c) கவிதை எழுது
   d) முடித்துக் காட்டு

**வினா: 16 - 20**
**பின்வரும் வாக்கியத்தில் தவறாக எழுதப்பட்ட சொல் எது?**

16. வெற்றிச் செய்தியைக் கேட்டதும் திருமகள் ஆனந்தக் கன்னீர் சிந்தினாள்.
   a) ஆனந்தக்
   b) கன்னீர்
   c) சிந்தினாள்
   d) இவை எல்லாமே

17. போரில் மாண்டுபோன வீரனின் நெஞ்சில் வீரத்தலும்புகள் கிடந்தன
   a) நெஞ்சில்
   b) வீரனின்
   c) தலும்புகள்
   d) இவை எதுவுமில்லை

18. எனக்கு மாம்பலங்கள் என்றால் நல்ல விறுப்பம்
   a) மாம்பலங்கள்
   b) விறுப்பம்
   c) இவை இரண்டும்
   d) இவை எதுவுமல்ல.

**வினாக்கள்: 19 - 20. பின்வரும் பாடல் அடிகளில் தவறான சொல்லுக்கு சரியான சொல்லைத் தெரிவு செய்க.**

19. ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசைகொண்டு வாலியவே!
   a) வாளியவே!
   b) வாளி!
   c) வாழியவே!
   d) வாலியவே!

20. பெற்ற தாயும் பிறந்த பொண்ணாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே.

a) பொன்னாடு
b) பொண்நாடு
c) பொந்நாடு
d) பொன்ணாடு.

**வினாக்கள்: 21 - 25**
**பின்வரும் வாக்கியங்களில் விடுபட்ட சொற்களைத் தெரிவு செய்க.**

21. பிரதம விருந்தினர் ______________________ திறந்துவைத்து உரையாற்றினார்.

a) அரங்கில்
b) அரங்கை
c) அரங்கிற்கு
d) அரங்கினால்

22. வசந்தம் வீசவேண்டிய காலத்தில் மழை ______________________ கொட்டியது.

a) கொட்டோ கொட்டென்று
b) கொட்டெனவே
c) கொட்டியதனால்.
d) கொட்டியன்று

23. ரவியும் ராசாவும் நல்ல நண்பர்கள். ராசா கடற்கரைக்கு உலவச் சென்றான். தானும் வருகிறேன் என்றான் ரவி. ______________________ அழைத்துக்கொண்டு ராசா புறப்பட்டான்.

a) ரவியால்
b) ரவியோடு
c) ரவிக்காக.
d) ரவியை

24. போர் முடிந்து விட்டது. ______________________ மக்களின் துன்பம் தீரவில்லை.

a) ஆகவே
b) அதனாலே
c) அதற்கெனவே.
d) ஆனாலும்

25. நோய்களில் கொடியது மனநோய். ______________________ உடலைக் கட்டுப்படுத்தும் சக்தி மனதிற்கு உண்டு. உள்ளம் கெட்டால் உடல் கெட்டுவிடும்.

a) ஆனாலும்
b) அதனாலே
c) எனென்றால்
d) எப்படியும்.

**வினாக்கள்: 26 - 28**
**பின்வரும் பழமொழிகளை பொருத்தமான சொல்கொண்டு பூரணப்படுத்துக.**

| |
|---|
| a) குஞ்சு<br>b) கல்லு<br>c) சொத்து<br>d) வீசும் |

26. பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் ______________________

27. காக்கைக்கும் தன்குஞ்சு பொன் ______________________

28. பூவோடு சேர்ந்த நாரும் மணம் ______________________

**வினாக்கள்: 29 - 30**
**பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான பாடலைத் தெரிவுசெய்க.**

| |
|---|
| a) மங்கல வாழ்த்து<br>b) ஒப்பாரி<br>c) தாலாட்டு<br>d) கும்மி |

29. குழந்தையைத் தூங்க வைக்கப் பாடுதல்

30. இறந்தவரை நினைத்து உரத்து அழுதல்

**வினா: 31 - 35**
**பின்வரும் சிறப்பியல்புகளுக்குப் பொருத்தமான இலக்கியப் பாத்திரங்களைத் தொடர்புபடுத்துக.**

| |
|---|
| a) அர்ச்சுனன்<br>b) கர்ணன்<br>c) கும்பகர்ணன்<br>d) அனுமன் |

31. கொடையிற் சிறந்தவன்

32. இராமனின் தொண்டன்

33. மான வீரன்

34. வில்வித்தையில் சிறந்தவன்

35. இராவணனின் தம்பி

**வினா: 36 - 37**
**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| |
|---|
| a) நவாலியூர் சோமசுந்தரப் புலவர் |
| b) அழ வள்ளியப்பா |
| c) மகாகவி பாரதியார் |
| d) வித்துவான் வேந்தனார் |

36. காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கட்டிக்கொள்ளும் அம்மா என்ற பாடலைப் பாடியவர்.
37. நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? எனப் பாடியவர்.

**வினா: 38 - 40**
**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தெரிவு செய்க.**

| |
|---|
| a) பேராசிரியர் |
| b) வலைப்பூ |
| c) நாடாளுமன்றம் |
| d) இயக்குனர் |

38. Parliament

39. Blogs

40. Professor

**வினா: 41 - 45: பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

| |
|---|
| a) நி.ச.வே தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு |
| b) சிட்னி தமிழ் அறிவகம் |
| c) அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம் |
| d) அவுஸ்திரேலிய மருத்துவ நிதியம் |

41. சிட்னியில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை நடாத்துவோர்.

42. நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் தமிழ்ப் பாடநூல்களை வெளியிடுவோர்

43. சிட்னியில் தமிழ் நூலகம் ஒன்றை நடாத்துவோர்

44. வருடந்தோறும் முத்தமிழ் மாலை நிகழ்ச்சியை சிட்னியில் நடாத்துவோர்

45. கலப்பை காலாண்டு இதழை வெளியிடுவோர்.

அடுத்த பக்கத்தில் தொடரும்.

**வினா: 46 - 55.**

**பின்வரும் உரைப்பகுதியில் கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லை விடைத்தாளில் குறித்த எண்ணிற்கு எதிரே எழுதுக.**

பிரபல தமிழ் அறிஞரும் தமிழ் ஆய்வாளருமான கலாநிதி ஆ.கந்தையா அவர்கள் அண்மையில் சிட்னியில் காலமானார். தனது இறுதிக்காலம் வரையும் தமிழ் நூல்களை சிட்னியில் வெளியிடுவதில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர் கந்தையா அவர்கள். அவர் அவுஸ்திரேலியாவில் தமிழர் எண்ணிக்கை தொடர்பாகவும், தமிழ்ப் பாடசாலைகள், இசை நடனப் பள்ளிகள், அவற்றின் ஆசிரியர்கள், இந்து ஆலயங்கள் என்பவற்றின் எண்ணிக்கை தொடர்பாகவும் நேரடியாக எல்லா மாநிலங்களுக்கும் 46. _______________ ஆராய்ந்து பல நூல்களை எழுதியுள்ளார். அவர் சிட்னிக்குப் புலம்பெயர்ந்து வந்த காலத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் 47. ______________________ அவர் சிட்னிக்கு வந்த புதிதில் நியூசவுத்வேல்ஸ் மாநில நூலகத்திற்கு (State Library) சென்று தனது நூல்களை வாங்கமுடியுமா என்று 48. ______________________. அவர்கள் வாங்க மறுத்துவிட்டனர். ஏன் என்று கேட்டபோது தமிழ்ப் புத்தகங்களை யாரும் இங்கு கேட்பதில்லை. அதனால் அவை 49. ______________________ தேவையில்லை என்று சொல்லிவிட்டனர். வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாக அவுஸ்திரேலிய அரசின் இன அலுவல்கள் குழுவிற்கு (Ethnic Affairs Committee) ஒரு கடிதம் 50. ________________. அதில் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்கள் 51. ______________________ மாநில வாரியாகக் குறிப்பிட்டு நியூசவுத்வேல்ஸ் மாநில நூலகத்தில் தமிழ்ப் புத்தகங்கள் வாங்கப்படுவதன் 52. ______________________. வலியுறுத்தியிருந்தார். அதனைத் தொடர்ந்து நூலகத்தில் தமிழ்ப் 53. ______________________. வாங்கத் தொடங்கினர். அதனைப் போலவே சிட்னிப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் கற்பித்தல் தொடர்பாக அவர் முயற்சி எடுத்திருந்தார். அவரது ஆரம்ப கால தொழில் முறை ஈடுபாடுகள் கடும் விமர்சனங்களுக்கு ஆளாகியிருந்தமையை பலரும் 54. ______________________ புலம் பெயர்ந்த மண்ணில் தனது தள்ளாத வயதிலும் நேரடியாக கள ஆய்வுகள் செய்து தகவல்களைத் திரட்டி அவர் தொகுத்திருந்த நூல்கள் அவரின் நினைவை 55.______________________ நிற்கும்.